**மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரககாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் முகவராண்மையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க சம்மேளனத்தின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 727,303 தொகையான விளையாட்டு உபகரணங்கள் 25 சதவீதத்தினால் பெறுமானத் தேய்வு செய்வதாக கணக்கு குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது விளையாட்டு உபகரணங்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த விளையாட்டு உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை செய்யப்பட்டுள்ளது. | நடைமுறையல்லாச் சொத்துக்களில் மற்றும் அதற்குரிய பெறுமானத் தேய்வு சரியாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| விடயம் | தோகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| 8 கொடுப்பனவு விடயங்கள் | 4,134,814 | செலவின விபரங்கள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு, பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டுக்கள் | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும் | கொடுப்பனவு தொடர்பான ஆவணங்கள் போதியளவில் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல். |

### 1.6. செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அட்டுறு செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட 05 ஆண்டுகள் பழைமையான ரூபா 2,987,449 கூட்டுத்தொகையான 2 கணக்கு மீதிகளும் 03 ஆண்டுகள் பழைமையான ரூபா 5,000 ஆன 01 கணக்கு மீதிகளையும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறைவேற்று குழுவிற்கு சமர்ப்பித்து தீர்வு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | வெளித்தரப்பினருக்காக செலுத்த வேண்டிய பணத்தை தாமதமின்றி தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,332,963 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 590,121 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,742,842 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு ரூபா 52,159,264 ஆல் நேர் செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தன.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் எதிர்கால நோக்கை தீர்மானிக்கும் தந்திரோயங்களை கூட்டிணைந்த திட்டம் கொண்டிருக்க வேண்டியதுடன் உள்ளவாறான செயலாற்றல் நிரந்தர இலக்குகளை நோக்கி திசைமுகப்படுத்துவுதற்காக நடைமுறைச் சாத்தியமானதும் அடையக் கூடியதுமான இலக்குகளை உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டமொன்றை சம்மேளத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறைவேற்று குழுவுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதற்காக தெரிவித்துக் கொள்கின்றேன் | உள்ளவாறான செயலாற்றல் நிலைபேறான இலக்கை நோக்கி அடையக் கூடிய வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

**3.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதி மற்றும் பௌதீக இலக்குகள் என்பவற்றை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக ஆண்டின் இறுதியில் பொறுப்புக்களை குறிப்பிட்டு பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறைவேற்று குழுவுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதற்காக தெரிவித்துக் கொள்கின்றேன் | நிதி மற்றும் பௌதீக இலக்குகள் என்பவற்றை உரிய நேரத்தில் நிறைவேற்றுதல் மற்றும் நிதியை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**3.3 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சம்மேளத்தின் ரூபா 89.1 மில்லியன் வருமானம் மற்றும் ரூபா 92.3 மில்லியன் செலவினம் காணப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த சொத்துக்கள் கூட்டுத்தொகை ரூபா 6.7 மில்லியனாக இருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் சம்மேளத்திற்காக உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிறைவேற்று குழுவுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதற்காக தெரிவித்துக் கொள்கின்றேன் | சம்மேளத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் |

**3.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டு சாதனமாகப் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், சம்மேளத்தினால் மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டிற்காக நிதியாண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டும். |